# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS .No. 232/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திருமதி சத்யபாமா | ஊர் | : | |
| க.பெ. | : | திரு. சரவணக்குமார் | மாவட்டம் | : | |
| வயது | : | | தொழில் | : | |

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11-ஆம் நாள் **வா.சா. 2ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் திருச்சியில் குடியிருக்கிறேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். உள்ளது. சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் ஆமாம். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1999. என் அண்ணனுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 2004. மருத்துவமனையில் வைத்து எனது தாயாருக்கு மருத்துவ சிகிச்சை அளித்ததில் நான்தான் பார்த்து கொண்டேன் என்பதற்கு குறிப்பு இல்லை என்றால் ஆமாம். வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் அம்மா. தாசில்தார், மாவட்ட ஆட்சியருக்கு எதிராக என் தாயார் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. தாசில்தாரும மாவட்ட ஆட்யிரும் அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. அவர்களுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**